60

60

தாரண ஸ்ரீ மாசி - பங்குனி மீ | ஸ்ரீ: | ஸம்புடம் - 4 ஸஞ்சிகை - 3

March ஸ்ரீமதே ஶ்ரீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: 1945



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

“அஹோபிலே காருடஶைலமத்யே க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥”

பக்கம்

விஷய ஸூசிகை :—1. திருப்பாவை 19
2. ஸ்ரீ கீதாம்ருத வர்ஷிணீ 20
3. செய்திகள் 22
4. பஞ்சாங்க ஸங்க்ரஹம் 24
5. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 25

ஸ்ரீ:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 7, பக்கம் 224-ன் தொடர்ச்சி]

இவ்விதம் கீழ்ப் பத்துப் பாசுரங்களால், துயிலெழாத தோழிமார்களை எழுப்பி யழைத்துக்கொண்டு ஸ்வகோஷ்டியைப் பூர்த்தி செய்து, பிறகு உத்தேஶ்ய ஸாதநத்துக்காக மேல் நடக்கவேண்டியதை உபக்ரமிக்கிறார். இப்பாசுரங்களின் ஸங்க்யை பத்தாக அமைந்ததற்கு, மநஸ்ஸின் ஐகாக்ர்யத்துக்கு விக்ஷேபகாரிகளான தஶேந்த்ரியங்களின் ஸங்க்யை ஒருக்கால் நியாமகமாகுமோ வென்று முன்பு குறிக்கப்பட்டது. அல்லது யோக சாஸ்த்ரத்தில் கூறியபடி வ்யாதிஸ்த்யாநாதிகளான நவசித்த விக்ஷேபங்களால் தடைபட்ட மநஸ்ஸை ப்ரபோதநம் பண்ணும் க்ரமத்தில் இவ்விக்ஷேபங்களையும் மநஸ்ஸையும் சேர்த்துப் ப[illegible] கணநம் செய்து அந்த ஸங்க்யையை அநுஸரித்துப் பாசுரங்கள் ஏற்பட்ட [illegible]ம். பத்து ஆழ்வார்களை இப்பாசுரங்களால் ஆண்டாள் துயிலெழுப் [illegible]து காரணமாகப் பாசுரங்களின் எண் பத்தாக அமைந்ததென்று [illegible]கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ‘ஆழ்வார்கள் விஷ[illegible]தநாபேக்ஷகர்கள் என்பது பொருந்துமோ? பகவதநுபவ விஷ[illegible]ாகரூகர்கள் அல்லவோ?’ என்கிற சங்கை ஏற்படக்கூடு மாகை[illegible]தற்காக இப்பாசுரங்களுக்கு அந்யாபதேசார்த்தம் ஸ்வாபதேசார்த்[illegible] அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. இவ்வகையான ஸம்ஜ்ஞா வசநங்[illegible] சிந்த்ய மென்று நினைக்கவேண்டிய தாகிறது. ஸ்வாபதேசம் என்பது [illegible]பதேஶமாகத் தோன்றவில்லை. அவிவக்ஷிதமான ஆபாதார்த்தத்தை அந்

JL
Q22ம211, N41
N45.43.
210735

யாபதேச மென்று வ்யவஹரிப்பதும், விவக்ஷிதமான தத்வார்த்தத்தை வ்யங்க்யார்த்தம் அல்லது ஶ்ருங்காரார்த்தம் ஆகூதம் முதலிய பதங்களைக் கொண்டு வ்யவஹரிப்பதும் உசிதமே தவிர, இதை ஒரு அபதேச கோடியில் சேர்த்து ஸ்வாபதேசம் என்பது யுக்தமாகப் படவில்லை. அபதேச பதம் வ்யாஜமாகக் கைக்கொள்ளப்பட்ட அமுக்யத்தைக் குறிக்குமே தவிர, தாத்விகமாக எண்ணப்பட்ட முக்யத்தைக் குறிக்காது. ஆகையால் தாத்விகமாக உத்திஷ்டார்த்தத்தை ஸ்வாபதேசம் என்பது ஒவ்வாது. இவ்விடத்தில் வாச்யார்த்தத்தைக் காட்டில் வேருக ஏதாவது ஶ்ருங்காரார்த்தம் இருப்பதாக ஏற்படும் பக்ஷத்தில் அதை வ்யங்க்யார்த்த மென்றோ த்வந்யர்த்த மென்றோ வ்யவஹரிப்பதே உசிதமாகும். இங்கு வ்யங்க்யார்த்தத்துக்கு ப்ரஸக்தி இருப்பதாகத் தோன்றவில்லை. வாச்யார்த்தமே அத்யாத்ம ஸாராம்ஶங்களைப் பொதிந்துகொண்டு காந்தாஸம்மிதோபதேசமாக இருக்கின்றதென்பது முன்பே ப்ரதிபாதிக்கப்பட்டது. மேலும், இந்த க்ரந்தமே ஆமூலாக்ரம் தத்வஹித புருஷார்த்தங்களை லலிதமாகவும் வ்யக்தமாகவும் ஸுந்தரமாகவும் ஸர்வஜந ஸம்வேத்யமான ப்ரக்ரியையில் விஶதீகரணம் செய்வதற்காக ப்ரவ்ருத்தம் என்கிற விஷயமும் ஏற்கெனவே விவரிக்கப்பட்டது. ஆகையால் இங்கு வாச்யார்த்தத்தை அடியோடு பரித்யாகம் செய்தோ அல்லது அநாதரம் செய்தோ, மற்றொரு வ்யங்க்யார்த்தத்தைக் கல்பிக்கவேண்டிய அவஶ்ய மிருப்பதாக ஏற்படவில்லை. அப்படிச் செய்வதால் ஶப்த க்லேஶம் ஏற்பட்டுக் காவ்ய ரஸத்துக்குப் பங்கம் நேரிடும். இவ்விதம் அப்ரஸக்தார்த்தங்களைக் கதஞ்சித் கல்பித்தால் இம்மாதிரி நாநாப்ரகாரமான கல்பநங்கள் அவரவர் மநோ தர்மாநுஸாரமாய் ஏற்படக் கூடுமாதலால், அநவஸ்தா ப்ரஸங்கம் உண்டாகும். இவை முதலான ஹேதுக்களை உத்தேசித்து அந்யாபதேசம் ஸ்வாபதேசம் என்கிற ப்ரக்ரியை இங்கு அவலம்பிக்கப்படவில்லை. தவிர: முன் வ்யாக்யாநங்களில் இது விஸ்தாரமாய் ப்ரபஞ்சிக்கப்பட்டிருப்பதால், அவைகளை யெல்லாம் இங்கு அநுவதிப்பது அநாவஶ்யகம். இப்பத்துப் பாசுரங்கள் 'ஒரே திநத்தில் ப்ரபோதநம் பண்ணப்பட்ட தோழிகளை உத்தேசித்து வரிசை க்ரமமாய் உதாஹரிக்கப்பட்டவைகளா? அல்லது ஒவ்வொருத்தியை வெவ்வேறு திநத்தில் எழுப்புகையில் ப்ரயோகிக்கப்பட்டு க்ரந்தத்தில் விஷயைக்யத்தை அநுஸரித்து ஒன்று சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கின்றனவா?' என்று சங்கை உண்டாகக் கூடும். இதற்கு முன் அந்தந்தப் பாசுரத்தின் வ்யாக்யாந ஸந்தர்ப்பத்தில், இவையெல்லாம் ஒரு நாளிலேயே ஒன்றன்பின் ஒன்ருக ப்ரயோகிக்கப்பட்டவைபோல் கூறப்பட்டது. ஆனால் எல்லா ஸந்தர்ப்பங்களையும் பராமர்ஶித்தால் அவ்விதமே கொள்ளவேண்டு மென்கிற நிர்ப்பந்த மிருப்பதாகப் புலப்படவில்லை. வெவ்வேறு நாட்களில், ஒவ்வொரு தோழி உறங்குவதைக் கண்டு அவரவரை எழுப்புவதற்காகத் தனித்தனியே பேசப்பட்டதாக வைத்துக் கொள்வது ஸ்வரஸமா யிருக்கு மென்று நினைப்பதும் அநுசிதமாகாது. 'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்' என்றும், 'எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்' என்றும், முன் நடந்த ஸம்பாஷணைகளைப்பற்றி ப்ரஸ்தாவிப்பதும், பொழுது விடிந்த அடையாளங்களைக் குறிக்கும் விதங்களும் இவ்வபிப்ராயத்துக்கு ஸாதகமாகும். இதற்கு மூல ப்ரமாணமாய் நிற்கும் 'உஷஸ்யுத்தாய்ய தாமோதரா' என்கிற ஸ்ரீ பாகவத வசநம் இவ்விரண்டு பக்ஷங்களுக்கும் பொதுவாயிருப்பதால் எந்த அபிப்ராயம் கொண்டபோதிலும் பாதகமாகாது.

இவ்வாறு இந்தக் கந்யகைகள் ஒருங்குகூடி வ்ரதாங்கமாகத் திநந்தோறும் ஸ்நாநம் செய்து பரிசுத்தராய் வ்ரதாநுஷ்டாநம் பண்ணிக்கொண்டு வருகையில், வ்ரதம் ஸமாபநமாகப் போகிற தறுவாயில் பரம காருணிகனை பகவான் இவர்கள் விஷயத்தில் கருணை கூர்ந்து பலப்ரதாநம் செய்வதாக வாக்தாநம் பண்ணியதன்பேரில் இவர்கள் அதைப் பெற வேண்டு மென்கிற அவாக் கொண்டவர்களாய், "க்ஷுத்ராயித்வா ததோ நமேத் ஹோவாயேக" என்கிற சாஸ்த்ரார்த்தப்படி தாங்கள் அவனை வேண்டிக்கொள்வதற்காக அவனுடைய திருமாளிகையை நோக்கிச் சென்று முதலில் அங்குள்ள த்வாரபாலகர்களை ஸம்போதிக்கிருர்கள் 'நாயகனாய்........' என்று.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீ கீதாம்ருதவர்ஷிணீ

[சிலுக்கூர் ஸ்ரீ. உப. மா. வேங்கடராகவாசார்யர், சிரோமணி,
ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம், ஹைதராபாத்; கத்வால் ஸம்ஸ்தாந தர்மாதிகாரி]

ஸ்ரீ பாஷ்யகாரரான நம் இராமானுசன் கீதாபாஷ்யாரம்பத்தில் 'யத்பதாம்போருஹ' என்கிற மங்கள ஶ்லோகத்தால் தமக்குப் பரமாசார்யனை ஆளவந்தாரைப் பஜிக்கிருர். இவர் இப்படித் தம் ஆசார்யர்கள் ஐவரையும் விட்டுப் பரமாசார்யனைத் துதிப்பது, தம் ஆசார்யர்களுக்கு உகப்பானது என்றெண்ணியும், ஆசார்ய வம்ஶம் அநுஸந்திக்கப்பட வேண்டும் என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை யொட்டியும் யுக்தமானது. ஏகலவ்யன்

த்ரோணாசார்யரை ஒரு தடவை தர்சித்து அவரிடத்தில் வித்யையை க்ரஹிக்காம லிருந்த போதிலும், அவரை ப்ரதிமையாகச் செய்து த்யாநித்து இஷ்டஸித்தியை அடைந்ததுபோல், தாமும் ஆளவந்தாரை ஒரு தடவை ஸேவித்தவாறே ஸத்வோந்மேஷம் பிறந்தபடியால் அவருடைய அநவரத த்யாநத்தால் வாஸனை யில்லாமல் ஸமஸ்த கல்மஷங்களும் நாச மடைந்தன என்பது 'த்யாந' சப்தார்த்தம். இங்கு சேஷாவதார மென்றும் 'ராகவாநுஜ ஜீவஷ ஹ்ருதய:' என்கிறபடி ஸ்ரீ க்ருஷ்ணவதார மென்றும் புகழ்பெற்றுத் தோஷகந்த ரஹிதரான நம் இராமானுசனுக்குக் கல்மஷமாவது என் என்னில், ஸமஸ்த ஸித்தாந்தங் களையும் நன்கு அறிந்த இவருக்குப் பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய மதங்களே கல்மஷங்கள் என்றும், அவைகள் நெஞ்சில் புலப்படாமலிருக்கையே கல்மஷ நாசந மென்றும் சொல்ல வேண்டும். 'வஸூநாம்' என்பதால் 'ஸஹஜௌநம் தஹேதா விஜ:' என் கிற ஶ்ருதிக்குத் தாம் விஷயமாகியதைத் ஸூசிப்பிக்கிறார். இப்படி அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக மாக இஷ்ட ப்ராப்தியை அடைந்தவராய் நமஸ்கார ரூபமான மங்களத்தை க்ரந்தத்தில் நிரூபிக்கிறார். 'நாராயண: பரம் ப்ரஹ்ம கீதாஶாஸ்த்ரே ஸமீரித:' என்கிற வசநத்தை யொட்டிக் கீதாசாஸ்த்ரத்தாலே ப்ரதிபாத்யன் ஸ்ரீமந்நாராயணன் என்கிற விஷயத்தை ஸூசிப்பிப்பதற்காக 'ஶ்ரிய:பதி:' என்று தொடங்கி 'பக்தியோக மவதாரயாமாஸ' என்ற வளவிலும், ஸ்ரீமந்நாராயணனே பரதத்வ மென்றும், ஸர்வகர்ம ஸமாராத்ய னென்றும், ஸமஸ்த கல்யாண குணாகர னென்றும், ஹேய குண ரஹித னென்றும், ஸ்வ தந்த்ர ஸ்வாமி என்றும், ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளய காரக னென்றும், இவனே ப்ரம்ஹாதி ஸ்தாவராந்தமான ஸமஸ்த ஜகத்தையும் ஸ்ருஷ்டித்துத் தான் தன்னுடைய ஸ்வபாவத்தை விடாதவனாக அந்தந்த லோகங்களில் அவதரித்து அவரவர்களாலே ஆராதிக்கப்பட்டு அவ ரவர் உபாஸநாநுகுணமாக தர்மார்த்த காம மோக்ஷங்களாகிற நான்கு புருஷார்த்தங்களைக் கொடுத்துக்கொண்டு பூபாரத்தை நீக்குகிற வ்யாஜத்தால் ஸகல ஜநங்களுக்கும் தன்னு டைய திவ்ய ஸேவையைக் கொடுத்து முக்யமாக ஸாதுபரித்ராணம் செய்து, ஆநுஷங்கிக மான துஷ்டநிரஸநமும் செய்து அர்ஜுநனை யுத்தத்திற்கு ப்ரோத்ஸாஹம் செய்யும் வ்யா ஜத்தாலே பக்தியோகத்தை ப்ரகாசிப்பித்தார். குரு பாண்டவர்களுடைய யுத்தம் ப்ர ஸக்தமானபோது, பகவான் நிக்ருஷ்டனை அர்ஜுநனை ரதியாக்கி உத்க்ருஷ்டனை தான் அபக்ருஷ்டமான தேர்ப்பாகன் தன்மையில் நிற்கும் நிலைமையை எல்லா உலகங்களும் அறியுமாறு தெரிவித்தார். இவ்வ்ருத்தாந்தத்தைத் தெரிந்துகொண்டிருந்தும், குருடனையும் ஹிதத்தை அறியாதவனுமாகிய த்ருதராஷ்ட்ரன் துர்யோதநனுடைய விஜயத்தை அபே க்ஷித்தவனாய் ஸஞ்ஜயரைக் குறித்துத் 'தர்மக்ஷேத்ரே' என்று ஆரம்பித்து, 'குருக்ஷேத்ரத் தில் பாண்டவர்களும் என்னைச் சேர்ந்த துர்யோதனாதிகளும் யுத்தத்தில் இச்சையுள்ளவர் களாயிருந்து என்ன செய்தார்கள்?' என்று கேட்க, ஸஞ்ஜயர், 'த்ருஷ்ட்வாது' என்று தொடங்கி த்ருதராஷ்ட்ரனைப் பார்த்துச் சொல்லுகிறார்:—ஓ ராஜனே! துர்யோதநன் பாண்டவர்களுடைய ஸைந்யத்தைப் பார்த்துத் தன் ஆசார்யனான த்ரோணாசார்யரை நோக்கிப் பாண்டவ ஸைந்யத்தில் ஸேநாதிபதியையும் சில ப்ரதாநமான மஹாரதர்களை யும் தெரிவித்து, அவர்களுடைய ஸைந்யம் ப்ரபலமாக இருப்பதையும், தன்னுடைய ஸேனைகள் அவ்வளவு பலிஷ்டங்களாக இல்லாமையையும் தன் ஸைந்யத்தில் சில ப்ரதாந புருஷர்களையும் தெரிவித்தான். இதைக் கேட்ட பீஷ்மர் துர்யோதநனுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணும் பொருட்டு ஸிம்ஹநாதம் செய்து சங்கத்தையும் ஊதினார். பிறகு இரு புறத்தாரும் சங்கநாதங்களையும் செய்து பேரி முதலான வாத்யங்களையும் அடித்தார்கள். அப்பொழுது அர்ஜுநன் கண்ணனைப் பார்த்து 'ஹே அச்யுதா! இரண்டு ஸேனைக ளுடைய நடுவில் என்னுடைய ரதத்தை நிறுத்து; என்னுடன் சண்டை செய்ய யார் ஸித்த மாக எந்த ஸந்நாஹத்துடன் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறேன்' என்று சொல்ல, கண்ணபிரானும் அவ்வாறே ரதத்தை நிறுத்த, யுத்த பூமியில் சண்டைக்கு ஸித்தமாக நிற்கிற ஆசார்யர்கள் அம்மான் ஸஹோதரர்கள் புத்ரர்கள் மைத்துனர்கள் ஸம்பந்திகள் ஸ்நேகிதர்கள் முதலானவர்களைப் பார்த்து இவர்களுடைய நாசத்தை யோசித்து, தயை யால் துக்கித்தவனாய்க் கண்ணபிரானை நோக்கி, 'கண்ணா! பந்துக்களோடும் ஆசார்யன் முதலானவர்களோடும் சண்டை செய்ய எனக்கு மனமில்லை; உடல் நடுங்குகிறது; என் மநஸ் ப்ரமித்துவிட்டது; எனக்கு ராஜ்யமும் ஜயமும் வேண்டாம்; இவர்களைக் கொன் ருல் பாபம் ஸம்பவிக்கும்; இதனால் குலக்ஷயம் ஏற்படும். அதனால் ஸநாதநமான குலதர் மங்கள் நசித்துவிடும்; தர்மம் நசித்தால் அதர்மம் அபிவ்ருத்தமாய்க் குலஸ்த்ரீகள் நசித்து விடுவார்கள்; ஸ்த்ரீகள் துஷ்டர்களானால் வர்ணஸங்கரம் ஏற்படும்; அதனால் நரகத்திற்கு ஆளாவோம். பிறகு ஶ்ராத்த தர்ப்பணாதிகள் இல்லாதபோது பித்ருக்களும் கெட்டுவிடு வார்கள். ஆகையால் நான் யுத்தம் செய்யமாட்டேன்' என்று சொல்லித் தநுஸ்ஸையும் பாணத்தையும் கீழே எறிந்து, ரதியானவன் இருக்கவேண்டும் ஸ்தாநத்தை விட்டு ரதத்தி னுடைய ஸமீபத்தில் உட்கார்ந்துவிட்டான். இது முதல் அத்யாயத்தினுடைய சுருக்கமான அர்த்தம். இங்கு சில விசேஷார்த்தங்களைத் தெரிவிக்கிறேன்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக திருநக்ஷத்ரக் கொண்டாட்டம்

நாளது தாரண வருஷ தைமீ 29உ (11-2-45) ஞாயிற்றுக்கிழமை யன்று உத்திராஷாட நக்ஷத்ர யுக்த சுப திநத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்பாதி பிருதலங்க்ருத ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பெங்களூரில் பகவதுத்ஸவங்களுடன் வாசியற அதிவிமர்சையாக நடைபெற்றது. அப்பொழுது ப்ரதி ஸம்வத்ஸரம் நடந்து வரும் மாலோல ஸதஸ்ஸும் அவ்விடத்திலேயே நடத்தப்பட வேண்டுமென்று ஸ்ரீ. உப. B. K. கருடாசார்யர் முதலிய ஸச் சிஷ்யர்கள் ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ள முகந்து, அந்த ஸதஸ் தைமீ 20உ (2—2—45) முதல் 29உ (11—2—45) பர்யந்தம் நடைபெற்றது. அந்த ஸதஸ்ஸில் காலை மாலை இரு வேளைகளிலும் வாக்யார்த்தங்களும், பிறகு ஸாயம் 6½-மணி முதல் 7½-மணி வரை ப்ரதிதிநம் வித்வான்களைக்கொண்டு உபந்யாஸங்களும் நடத்தப்பட்டன. நாநா தேசங்களிலிருந்து அநேக வித்வான்கள் எழுந்தருளி ஸபையை அலங்கரித்தார்கள். ஸ்ரீ. உப. தேவனார்விளாகம் வித்வான் லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கர் நியமநப்படி கூட இருந்து ஸதஸ்ஸை நடத்தி வைத்தார். பிறகு சததூஷணி மஹோத்ஸவமும், சததூஷணியில் வாக்யார்த்தமும் நடைபெற்றன. எழுந்தருளியிருந்த வித்வான்கள் ஒவ்வொருவர்க்கும் போக வர ரயில் சார்ஜும் 20 ரூ. ஸம்பாவனையும் ஸ்ரீ அழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்டன. இந்த ஸதஸ்ஸில் பண்டிதர்களுக்கு உபசாரங்கள் பரத்வாஜாதித்யம்போல் நடத்தப்பட்டு, வித்வான்கள் அனைவரும் ஸந்துஷ்டராய் எழுந்தருளினார்கள்.

[மற்றும் பெரும்புலியூர், பண்ருட்டி, தூசி, கல்கத்தா, பாதூர், தேரழுந்தூர் முதலான அநேக ஸ்தலங்களிலும் இந்தத் திருநக்ஷத்ரம் மிகச் சிறப்புடன் நடைபெற்றதென்று அவ்விடங்களிலிருந்து செய்திகள் விரிவாக எழுதப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கின்றன. பத்ரிகையின் கார்ஶ்ய ப்ரயுக்த அவகாஶக் குறைவால் அவைகளை அப்படியே ப்ரகாஶிப்பிக்க முடியாமைபற்றி ஶோகிக்கின்றோம். ஸம்பாதகர்-ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.]

மாலோல ஸதஸ்ஸில் அந்வயித்த வித்வான்களின் திருநாமங்கள்

1. ஸ்ரீ புள்ளம்பூதங்குடி ராஜகோபாலாசார்ய ஸ்வாமி
2. ,, வடுவூர் ராமபத்ராசார்ய ஸ்வாமி
3. ,, பழவேரி நரஸிம்மாசார்ய ஸ்வாமி
4. ,, குரிச்சி ஸ்ரீநிவாஸ ரங்காசார்ய ஸ்வா[மி
5. ,, தேவனார்விளாகம் லக்ஷ்மீநரஸிம்மாசார்ய ஸ்வாமி
6. ,, ஸ்ரீகார்யம்ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி
7. ,, முக்கூர் ராஜகோபாலாசார்யஸ்வாமி
8. ,, இஞ்சிமேடு ராகவாசார்ய ஸ்வாமி
9. ,, சிலுக்கூர் வெங்கடராகவாசார்ய ஸ்வாமி
10. ,, தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி
11. ,, அக்னிஹோத்ரம் தாதாசார்ய ஸ்வாமி
12. ,, திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி
13. ,, வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமி
14. ,, ஸ்ரீநிவாஸ பாட்டராசார்ய ஸ்வாமி
15. ,, மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வா[மி
16. ,, அன்பில் கோபாலாசார்ய ஸ்வாமி
17. ,, அனந்தாண்பிள்ளை ஆழ்வார் திருமலை அய்யங்கார் ஸ்வாமி
18. ஸ்ரீ வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி
19. ,, மேல்பாக்கம் நரஸிம்மாசார்ய ஸ்வா[மி
20. ,, பாதூர் ராகவாசார்ய ஸ்வாமி
21. ,, பாதூர் கோபாலாசார்ய ஸ்வாமி
22. ,, அத்தி கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி
23. ,, வளையப்புதுத்தூர் ஸம்பத்குமார வரதாசார்ய ஸ்வாமி
24. ,, அத்தி ஸாரநாதாசார்ய ஸ்வாமி
25. ,, ஏமப்பூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி
26. ,, திருப்பதி வாஸுதேவாசார்யஸ்வாமி
27. ,, பிள்ளைபாக்கம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி
28. ,, சொக்கனூர் நரஸிம்மாசார்ய ஸ்வாமி
29. ,, களத்தூர் வீரராகவாசார்ய ஸ்வாமி
30. ,, பாப்பான்குளம் வரதாசார்யஸ்வாமி
31. ,, பெருகாரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி
32. ,, நாவல்பாக்கம் கிருஷ்ணஸ்வாமி தாதாசார்ய ஸ்வாமி
33. ,, கோழியாலம்சடகோபாசார்யஸ்வாமி
34. ,, மேல்மா நரஸிம்ம தாதாசார்யஸ்வாமி
35. ,, திருவரங்கம் ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி

36. ஸ்ரீ திருப்பதி கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி
37. ,, சிறுங்கட்டூர் ஸ்ரீராமதேசிகார்ய ஸ்வாமி
38. ,, கோஷ்டீபுரம் தாமோதராசார்ய ஸ்வாமி
39. ,, மோஹனூர் தேசிகாசார்ய ஸ்வாமி
40. ,, கோழியாலம் ரங்காசார்ய ஸ்வாமி
41. ,, நாவல்பாக்கம் நீலமேகாசார்ய ஸ்வாமி
42. ,, ,, தாத தேசிகாசார்யஸ்வாமி
43. ,, ,, ராஜகோபாலதாதாசார்ய ஸ்வாமி
44. ,, ,, ரங்கநாத தாதாசார்ய ஸ்வாமி
45. ,, புரிசை வரத தேசிகாசார்ய ஸ்வாமி
46. ,, நாவல்பாக்கம் தேவநாதாசார்ய ஸ்வாமி
47. ,, ஸ்ரீபெரும்புதூர் ஸௌந்தரராகவாசார்ய ஸ்வாமி
48. ,, பருத்திப்பட்டு ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி
49. ,, தரணி வரதவிஷ்ண்வாசார்ய ஸ்வாமி
50. ,, கூத்தப்பாக்கம் ரங்காசார்ய ஸ்வாமி
51. ,, ,, லக்ஷ்மீநரஸிம்மாசார்ய ஸ்வாமி
52. ,, விஜயங்குப்பம் ரங்கநாதாசார்ய ஸ்வாமி
53. ,, கருடபுரம் திருமலாசார்ய ஸ்வாமி
54. ,, எம்பார் நரஸிம்மாசார்ய ஸ்வாமி
55. ,, ஸ்தாநீகம் ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமி
56. ,, ஜக்கு வெங்கடாசார்ய ஸ்வாமி
57. ,, திருநாராயண அய்யங்கார் ஸ்வாமி
58. ,, சிறுதாமூர் சேஷாத்ரியாசார்ய ஸ்வாமி
59. ,, கரூர் சேஷாசார்ய ஸ்வாமி
60. ,, மைஸூர் ராமாநுஜாசார்ய ஸ்வாமி
61. ,, சரகூர் ஸ்ரீநிவாஸ வரதாசார்ய ஸ்வாமி
62. ,, கொத்திமங்கலம் வரதாசார்யஸ்வாமி
63. ஸ்ரீ சக்ரவர்த்தி திருமலாசார்ய ஸ்வாமி
64. ,, கிடாம்பி வீரராகவாசார்ய ஸ்வாமி
65. ,, நீலாதனஹல்லி வெங்கடநரஸிம்மாசார்ய ஸ்வாமி
66. ,, சருக்கை ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி
67. ,, கல்யாணபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி
68. ,, ராமநாதபுரம் தேசிகாசார்ய ஸ்வாமி
69. ,, நொக்கிபள்ளி திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி
70. ,, ,, கஸ்தூரி ரங்காசார்ய ஸ்வாமி
71. ,, ,, ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி
72. ,, ஹெம்மிகே ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி
73. ,, ,, திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி
74. ,, தலைக்காடு கிருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி
75. ,, மல்லேஸ்வரம் ரகுநாத சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி
76. ,, ராமசந்திராசார்ய ஸ்வாமி
77. ,, அனந்தாண்பிள்ளை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி
78. ,, தாயார்ஸன்னிதி வரதாசார்யஸ்வாமி
79. ,, புரிசை திருவேங்கடாசார்ய ஸ்வாமி
80. ,, சேட்லூர் ஸ்ரீநிவாஸரங்காசார்ய ஸ்வாமி
81. ,, ஸ்ரீரங்கராஜபுரம் ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி
82. ,, ஸ்ரீரங்கராஜபுரம் ரங்காசார்யஸ்வாமி
83. ,, ஆகமபண்டிதர் கேசவ கோபாலபட்டர் ஸ்வாமி
84. ,, ,, கோதண்டராமாசார்ய ஸ்வாமி
85. ,, பிள்ளைபாக்கம் ராமாநுஜாசார்ய ஸ்வாமி
86. ,, ஸ்வர்ணம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி
87. ,, இளங்காடு ரங்காசார்ய ஸ்வாமி

2/0135

(2)

ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்.
திருவஹீந்த்ரபுரத்தில் நடந்த வைபவம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

நிகழும் தாரணவருஷ தைமீ 13உ (26—1—45) வெள்ளிக்கிழமை திருவாதிரை நக்ஷத்ரம் கூடிய சுபதிநத்தில், ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமதித்யாதி ஸமஸ்த விசேஷண விசிஷ்டராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வர்ஷ திருநக்ஷத்ர மஹோத்ஸவம், திருவஹீந்த்ரபுரத்தில் தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் எழுந்தருளியுள்ள ஆச்ரமத்தில் ஸம்ப்ரமமாக நடைபெற்றது. திருநக்ஷத்ர திநத்துக்கு 4-நாட்கள் முந்தியே (21—1—45 செவ்வாய்க்கிழமை காலை) அத்யாபக வேதபாராயண ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்கள் உபக்ரமிக்கப்பட்டு, காலை மாலை இருவேளைகளிலும் பாராயணங்கள் ச்ராவ்யமாய் நடந்தேறின. 26—1—45 வெள்ளிக்கிழமையன்று சாத்துமறை விசேஷப்படியாக நடத்தப்பட்டு, பாதுகா தீர்த்த விநியோகங்கள் முதலியன ண்ணப்பட்டன. இத்திருநக்ஷத்ரத்துக்குப் பெருமாள் கோவில், கூடலூர், மஞ்சக்குப்பம்

முதலான இடங்களிலிருந்து பல ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்ததுடன், உள்ளூரில் எல்லா ஸ்வாமிகளும் எழுந்தருளியிருந்து உபய வேதாந்த பாராயணங்களில் அந்வயித்துத் ததீயாராதநமும் செய்வித்தார்கள்.

அநந்தரம், அடியவர்க்கு மெய்யனுகிய ஸ்ரீ தெய்வ நாயகனது ஸந்நிதி வாசலில் அநேக ப்ரமுகர்களும் வித்வான்களும் குழுமி அடைக்காய் ஆகும் அவஸரத்தில், இவ்வூர் வித்வான் உபய பாஷா பண்டிதர் ஸ்ரீ. உப. சேட்லூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஐயங்கார் ஸ்வாமி, இவ்வழகிய சிங்கர் தைபொரு திங்களில் ஆதிரை நாள் வந்து தோன்றி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனது பரிபூர்ண கடாக்ஷத்தால் திவ்யாஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்து, எம்பெருமானுர் தர்சநத்துக்கு ஆதார ஸ்தம்பமாயும், அரும்பெரும் நிதியாயும், ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞையைத் தாம் ஸஞ்சாரம் செய்தருளிய தேசமெல்லாம் உகந்திட மதுரமான வாக்குக்களாலும் ஆஜாந சுத்தமான சாரித்ரத்தாலும் அநுஷ்டாந முகத்தாலும் ஸந்ததமும் வர்த்தநத்தையும் அபிவர்த்தநத்தையும் செய்துகொண்டும் எழுந்தருளியிருந்ததால் பர்யாய பாஷ்யகாரர் என்று சொல்லத்தகு மென்றும், ஸ்ரீ பிள்ளைபாக்கம் மஹாதேசிகன் இவ்விடம் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கர் தமது பூர்வாஸ்ரமத்தில் காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்தபோது, ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் திருமாளிகை நிர்மாணம் பண்ணவேண்டியதன்பொருட்டு ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் ஸ்ரீ ஸ்வாமியை நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் அந் நியமநத்தை ஶிரஸா வஹித்து, ஸ்ரீ அழகியசிங்கர்க்கு ப்ரதிநிதியாய்ப் பலநாள் எழுந்தருளியிருந்து அக் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்வித்த வ்ருத்தாந்தத்தையும், மற்றும் இம் மஹாதேசிகனின் ஶமதமாதி கல்யாண குணங்களையும் மஹா ஜனங்கள் வியக்கும்படி பரக்க உபந்யாஸம் செய்தார். பின்னர் சந்தந தாம்பூலாதிகள் வழங்கப்பட்டுக் கோஷ்டி கலைந்தது.

—பரவஸ்து திருமலாசார்யன்.

---

(3)

ஹிந்து சட்ட கமிடியின் சில ஆபாஸ உத்தேசங்கள்

இப்பொழுது ஸர்க்காரால், ஹிந்து மதாநுஷ்டாநங்களையெல்லாம் தெளிவாக ஒருமுகப்படுத்தி ஸர்வ ஸாதாரணமாகச் செய்து கொடுக்கும்படி கமிடி ஒன்று ஏற்படுத்தப்பட் டிருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்தக் கமிட்டியார் அநுஷ்டாநங்களை ஒருமுகமாகக் கோர்த்ததுடன் நிற்காமல், பஹு காலமாக ஶாஸ்த்ர நிர்ணயங்களென்று ஹிந்துக்களெல்லாராலும் ப்ரமாணமாக ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள கொள்கைகளுக்கு அத்யந்தம் விருத்தங்களான அநேக மாறுதல்களைச் செய்யலாமென்று ஆலோசித்திருப்பதாகத் தெரிகிறது. ஆபாஸமான பல கோட்பாடுகளை அதில் பார்க்கலாம். அவைகளுள் மிக ஆபாஸமானது விவாஹ ரத்து என்பது. இதன்படி ஹிந்துக்களுக்குள் உள்ள எல்லா வர்ணங்களிலும், ஜாதிகளிலும் சில காரணங்களை முன்னிட்டு கல்யாணத்தை ரத்து செய்துகொண்டுவிடலாம். அக்னி ஸாக்ஷியாய் மந்த்ர பூர்வகமாய் செய்துகொண்ட கல்யாணத்தையும் ரத்து செய்துவிடலாம். அவ்வரனும் பெண்ணும் அவர்களிஷ்டப்படி வேறு கல்யாணம் செய்துகொள்ளலாம். இப்படி ஆயுள்வரை செய்துகொண்டே யிருக்கலாம். இதன் ஆபாஸத்தைப் பற்றி என் சொல்வோம்? ஹிந்து மதம் என்ன ஸ்திதியை அடையப் போகிறதோ? கலி கோலாஹலம் இன்னும் விசித்ரங்களான மாறுபாடுகளையும் செய்யும். இனி மநுஷ்யர்கள் ஆடு மாடுகளைப் போலவே நடந்து வருவார்கள். இதுவும் ஈஶ்வரேச்சையா? தர்ம ஸம்ஸ்தாபநத்தில் ஊக்கமுள்ள ஈஶ்வரன் இம்மாதிரி முயற்சிகளைத் தடுக்க வேணுமென்று ப்ராத்திக்கிறோம்.

—ஒரு வைதிகன்.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ஸ்ரீ பங்குனி மீ

1உ	புதன்கிழமை	...	மீன சுக்ல ப்ரதமா திதி
2உ	வியாழக்கிழமை	...	தெலுங்கு வர்ஷப் பிறப்பு. (யுகாதிப் பண்டிகை)
11உ	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
15உ	புதன்கிழமை	...	பங்குனி உத்திரம்.
27உ	திங்கட்கிழமை	...	ஸ்ரீவைஷ்ணவ ஏகாதசி.
30உ	வியாழக்கிழமை	...	அமாவாஸ்யை.

பார்த்திவ ஸ்ரீ சித்திரை மீ

1உ	வெள்ளிக்கிழமை	...	ப்ரதமை 25-32. அஶ்விநி 30-3. மேஷ ரவி 9-16. மேஷ ஸங்க்ரமண தர்ப்பணம். தமிழ் வர்ஷப் பிறப்பு.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

210135

ஸத்யாஸத்ய விவேசநம்

"सत्यं वद" "सत्यान्न प्रमदितव्यम्" "सत्ये धर्मः प्रतिष्ठितः" [உண்மையைப் பேசவேண்டும். உண்மையை விட்டு விலகக்கூடாது. உண்மையிலேயே தர்மம் நிலை பெற்று நிற்கின்றது] இத்யாதியாக வேதம் உண்மையைப் புகழ்ந்து பேசுகின்றது. உண்மை பேசுவதாவது: ஒரு வஸ்துவை உள்ளபடி அறிந்து அதை அறிந்தபடி வெளியிடுவதே. ஆனால் ஒருவன் ஒரு வஸ்துவை உள்ளபடி அறியத் தவறினாலும், அதை அவன் எப்படி அறிந்தானோ அதற்கு விரோதமின்றிக்கே அதைப்பற்றி அவன் பேசினால் அதுவும் ஸத்யமாகுமென்று சொல்லக்கூடும். ஏனென்றால், வஸ்துவின் ஸத்யத்வம் யதார்த்த தர்ஶநத்தை அபேக்ஷித்திருக்கையிலும், யதா த்ருஷ்ட ஶ்ருத வசந மாத்ரத்தில் வக்தாவுக்குத் தோஷம் வரமாட்டாததன்றோ? இந்த லக்ஷணத்தை மநு "सत्यं भूतहितं प्रोक्तम्" [எது பூதஹிதமோ அது ஸத்யம்] என்றும், ஸ்ரீ பாஷ்யகாரர் "यथादृष्टविषयं भूतहितरूपं वचनं सत्यम्" [எப்படிப் பார்க்கிறோமோ அப்படியே பேசுவதுடன் நாம் பேசுவது ப்ராணிகளுக்கு ஹிதமாகவும் இருத்தல் வேண்டும்; அது தான் ஸத்யம்] என்றும் பரிஷ்கரித்திருக்கிறார்கள். அப்பொழுது, உள்ளபடி சொல்வது பூத ஹிதமாக இராவிட்டால் அதற்கு விருத்தமாகப் பேசுவதும் ஸத்ய வசநமாகுமோ என்று ஒரு ஶங்கை ஏற்படுகின்றது. இதைப்பற்றி மஹா பாரதத்தில் ஒரு வித நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. அதைச் சற்றுப் பராமர்ஶித்துப் பார்ப்போம்.

குரு க்ஷேத்ரத்தில் ஒரு நாள் நடு யுத்தத்தில் தர்மபுத்ரர் கர்ணனால் அடிக்கப்பட்டு மஹத்தான க்லேஶத்தை அடைந்தார். அப்பொழுது அந்த க்லேஶம் தாங்கமாட்டாமல் அவர் அர்ஜுநனை நோக்கி, 'ஹே அர்ஜுந! என்னை ஸம்ரக்ஷிக்க ஶக்தியற்ற உனக்குக் காண்டீவம் எதற்கு? அதை உன் தேரோட்டும் க்ருஷ்ணனிடம் கொடுத்துவிட்டு நீ தேரோட்டும் வேலையை எடுத்துக்கொள். அதுதான் உனக்குத் தகுந்ததென்று எண்ணுகிறேன்' என்று நிந்தித்துப் பேசினார். அந்த நிந்தையை ஸஹியாத அர்ஜுநன் உடனே கத்தியை உருவிக்கொண்டு தர்மபுத்ரரின் தலையை அறுத்துத் தள்ள ஆரம்பித்தான். அர்ஜுநனுக்கு வ்ரதமொன்று உண்டு. தன்னைப் பார்த்து எவன் 'உன் காண்டீவத்தை மற்றொருவனிடம் கொடு' என்று அவமதித்துப் பேசுகிறானோ அவன் தலையை அறுத்துத் தள்ளவேண்டுமென்பதே அந்த வ்ரதம். ரோஷத்தாலும் இந்த வ்ரதத்தின் வேகத்தாலும் அர்ஜுநன் தனது தமையனாரிடம் அந்தப் பாபத்தைச் செய்ய உத்யுக்தனானான். அப்பொழுது ஸமீபத்திலிருந்த கண்ணபிரான், 'அர்ஜுந! என்ன கார்யம் செய்யத் துணிகின்றாய்? உனக்குப் பைத்யம் பிடித்துவிட்டதா?' என்று நிந்தித்து அவனுக்குத் தர்மத்தின் தத்வத்தைப் பின் வருமாறு உபதேசிக்கிறார். "தர்மங்களுள் ஸூக்ஷ்ம தர்மங்களென்று சில உண்டு. அவற்றை அறிந்து நடப்பவனே சரியான வழியில் நடப்பவனாவான். உன்னுடைய வ்ரதம் பங்கமாவதால் ஏற்படும் தோஷம் பெரிதா? குரு வதத்தால் ஏற்படும் தோஷம் பெரிதா? தர்ம ஸங்கடங்கள் நேரும் காலத்தில் தோஷங்களின் குரு லாகவங்களை நிறுத்துப் பார்த்து, எதில் தோஷம் அதிகமோ அதைக் கைவிட்டு, குறைந்த தோஷமுடையதை அவலம்பிப்பதே தர்மமாகும். குருவதம் பெரிய குற்றம். அதைச் செய்யாதே. வ்ரதபங்கம் அதை அபேக்ஷித்து அல்பம்'. இவ்வாறு உபதேஶித்து இதற்கு நிதர்ஶநமாக ஒரு உபாக்யாநத்தையும் சொல்லுகிறார். ஒரு காட்டில் கௌஶிகன் என்னும் ஒரு ப்ராஹ்மணன் ஸத்ய வசநத்தையே வ்ரதமாகக் கொண்டு பஹுகாலமாக வஸித்து வந்தான். அவனுக்கு 'ஸத்யவாதி' என்று பெயரும் ப்ரஸித்தமாக இருந்தது. ஒரு ஸமயத்தில் அநேக ஸ்த்ரீ பால வ்ருத்தர்கள் அடங்கிய ஒரு பெரும் யாத்ரிகர்களின் கூட்டம் திருடர்களால் துரத்தப்பட்டதாய், ஸத்யவாதியின் ஆஶ்ரமத்தின் ஸமீபத்திலுள்ள ஒரு புதரில் ஒளிந்துகொண்டது. அதனைத் துரத்திவந்த திருடர்கள் ஸத்யவாதியை நோக்கி, 'நீர் உண்மையைப் பேசுவீர் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். இவ்விடம் ஒரு யாத்ரிகக் கூட்டம் வந்ததே. அது எவ்விடம் போயிற்று? உண்மையைச் சொல்லவேண்டும்' என்று வினவினார்கள். ஸூக்ஷ்ம தர்மத்தை அறியாத அந்த ப்ராஹ்மணன் உண்மை பேசுவதையே பெரிதாகக் கருதி அந்த யாத்ரிகர்கள் ஒளிந்திருந்த இடத்தைக் காண்பித்துக் கொடுத்தான். திருடர்கள் உடனே அந்தப் புதரில் பாய்ந்து யாத்ரிகர்களெல்லாரையும் வதம் செய்து அவர்களிடமிருந்த த்ரவ்யம் முழுவதையும் அபஹரித்துக் கொண்டு போய்விட்டார்கள். அந்த ப்ராஹ்மணன் அது காரணமாக யமதூதர்களால் நரக

Regd. No. M. 4437

லோகத்திற்குக் கொண்டுபோகப்பட்டான்." இந்தக் கதையைச் சொல்லித் தர்மத்தின் லக்ஷணத்தைப் பின்வருமாறு அர்ஜுநனுக்கு உணர்த்தினர்.

"धारणाद्धर्ममित्याहु धर्मेण विधृताः प्रजाः । यस्माद्धारणसंयुक्तः स धर्म इति निश्चितः ॥
प्रभवार्थाय भूतानां धर्मप्रवचनं कृतम् । यस्मात्प्रभवसंयुक्तः स धर्म इति निश्चितः ॥
अहिंसार्थाय भूतानां धर्मप्रवचनं कृतम् । यस्मादहिंसासंयुक्तः स धर्म इति निश्चितः ॥"

[ப்ரஜைகளின் தாரணத்தின் பொருட்டு ஆவதே தர்மம். தர்மத்தாலேயே ப்ரஜைகள் தரிக்கப்பட்டு ஸ்திதி பெறுகிறார்கள். ஆகையால் எது ப்ரஜைகளின் தாரணத்துடன் கூடியிருக்கிறதோ அதுவே தர்மமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ப்ரஜைகளின் க்ஷேமத்திற்காகவென்றே மஹர்ஷிகள் தர்மத்தை ப்ரவசநம் செய்திருக்கிறார்கள். ஆகையால் எது ப்ரஜைகளின் க்ஷேமத்துடன் கூடியிருக்கிறதோ அதுவே தர்ம மென்பதுதான் நிர்ணயம். ப்ரஜைகளின் அஹிம்ஸைக்காக வென்றே மஹர்ஷிகள் தர்மத்தை ப்ரவசநம் செய்திருக்கிறார்கள். ஆகையால் எது அஹிம்ஸையுடன் கூடி யிருக்கிறதோ அதுதான் தர்மம்.]

இவ்விடத்தில் 'ப்ரஜைகள்' என்னும் பதம் மஹாஜநங்களைக் குறிக்கும். ஆத்ம ஹிதத்திற்காகவோ பந்து ஜநங்களின் ஹிதத்திற்காகவோ ஒருவன் ஒரு அதர்மத்தைச் செய்தால் அது தர்மமாகமாட்டாது. ஹரிஶ்சந்த்ரன் ஸத்யத்திலேயே உறுதியாக நின்றதெல்லாம், மஹா ஜநங்களுக்கோ அல்லது அவன் இருந்த தேஶத்திற்கோ ஒரு ஹாநியும் ப்ரஸங்கியாது என்னும் ஜ்ஞாநத்தினாலேயே. ஸீதாப் பிராட்டி ஸத்யத்தை விட்டு நழுவினதும், யதார்த்தத்தைச் சொன்னால் வாநர ஜாதிக்கே நாசம் வந்துவிடுமோ வென்னும் அஸ்தாந பீதியினாலேயே. ராக்ஷஸர்களுடைய க்ரௌர்யத்தை அநுபவித்து வரும் பிராட்டிக்கு அவ்விதமான அஸ்தாந பீதி ஸஹஜமே.

இந்த ந்யாயமே ஶாந்திபர்வாவில், 'எது ஸத்யம்? எது பொய்? எது தர்மம்?' என்று தர்மபுத்ரர் செய்த ப்ரஶ்நத்திற்குப் பீஷ்மாசார்யர்,

"भवेत्सत्यन्न वक्तव्यं वक्तव्यमनृतं भवेत् । यत्रानृतं भवेत्सत्यं सत्यं वाप्यनृतं भवेत् ॥"

[எவ்விடத்தில் பொய் பேசுவது ஸத்யமாக (அதாவது: பூதஹிதமாகப்) பரிணமிக்கிறதோ அவ்விடத்தில் பொய் பேசலாம். எவ்விடத்தில் உண்மை பேசுவது பொய்யாக (அதாவது: ப்ரஜைகளுக்கு அஹிதமாக) முடிகிறதோ அவ்விடத்தில் உண்மையைச் சொல்லக்கூடாது] என்றும்,

3/10/35 "सत्यानृते विनिश्चित्य ततो भवति धर्मवित्"

[எது ஸத்யம்? எது பொய்? என்பதை நன்றாக விசாரித்து நிர்ணயம் பெற்றவனே தர்மம் அறிந்தவனாவான்] என்றும் விளக்கினார்.

பாரதம் வேதம் போன்ற ப்ரமாண க்ரந்தம்; அதன் உபதேஷ்டாக்களோ ஸ்ரீ க்ருஷ்ணனும் பீஷ்மாசார்யரும்; நம் பூர்வாசார்யர்களும் இதையே வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகையால் இதுவே நமக்கு அத்யந்தம் உபாதேயமாக வேண்டும்.

இனி: ஸத்யாஸத்ய வசந நிர்த்தேசம் தமிழாசிரியர்களால் எவ்விதம் ஆராயப்படுகிறது என்பதைப் பராமர்சிப்போம். தமிழர்களால் 'பொது மறை' என்று கூறப்படும் திருக்குறளில், துறவறவியலில் 'வாய்மை' என்னும் அதிகாரத்தின்கண்,

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

எனும் குறள் வெண்பா வொன்று திருவள்ளுவரால் கூறப்பட்டிருக்கிறது, இதன் பொருள் :—பழி பாவங்களைத் தராத தருமத்தைக் கொடுக்குமாயின், பொய்ம்மைச் சொற்களும் சத்திய வார்த்தைகளைச் சேர்ந்தனவாம் என்பது. 'தீங்கு பயவாது நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை' எனவும், 'நன்மை பயவாது நிகழாதது கூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை' எனவும் அதன் இலக்கணம் கூறப்பட்டது" என்னும் அதன் பரிமேலழகர் உரையும், இதனையொட்டி "மெய்ம்மையே யொருவர்க் குற்ற விபத்தினை மீட்குமாயின், பொய்ம்மையும் மெய்ம்மைபோலப் புண்ணியம் பயக்கு மாதோ" என்னும் வில்லி பாரத ... நமுட் ...ண்டு அறியத் தக்கன.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madra.